


சிக்கலான அறுவை சிகிச்சை செய்துகொண்டு குணம் அடைந்த பெண்ணை டாக்டர் மோகன்தாஸ், மல்லிகா மோகன்தாஸ் ஆகியோர் வாழ்த்தியபோது எடுத்த படம்.

### இந்தியாவில் முதல் முறையாக

# இருதயம் மாற்றம் செய்த பெண் நோயாளிக்கு மீண்டும் அறுவை சிகிச்சை

## சென்னை மியாட் மருத்துவமனை சாதனை

சென்னை, டிச.13-

இந்தியாவில் முதல் முறையாக, இருதய மாற்று அறுவை சிகிச்சை செய்து கொண்ட பெண் நோயாளி ஒருவருக்கு மீண்டும் சிக்கலான அறுவை சிகிச்சை ஒன்றை சென்னை மியாட் மருத்துவமனை டாக்டர்கள் வெற்றிகரமாக முடித்துள்ளனர்.

### மியாட் மருத்துவமனை

சென்னை மியாட் மருத்துவமனையில் கடந்த மாதம் 22-ந் தேதி, தீவிர மார்பு வலி மற்றும் மூச்சுவிட சிரமப்பட்ட நிலையில் 25 வயது பெண் ஒருவர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். ஏற்கனவே, இவர் இருதய செயலிழப்பு காரணமாக 2009-ம் ஆண்டு வேறொரு மருத்துவமனையில் இருதய மாற்று அறுவை சிகிச்சை செய்துகொண்டவர் ஆவார்.

அனைத்து பரிசோதனைகளையும் டாக்டர்கள் மேற்கொண்டபோது, அவருக்கு ஏறுமுக பெருந்தமனியில் கூறுபாட்டு ரத்த நாள நெளிவு மற்றும் இருதயத்தின் முதன்மை வால்வில் (பெருந்தமனி வால்வு) கசிவு ஏற்பட்டுள்ளது கண்டறியப்பட்டது.

### டாக்டர்கள் முடிவு

அவரது உயிரை காப்பாற்ற பெரிய அறுவை சிகிச்சை ஒன்றை மேற்கொள்ள டாக்டர்கள் முடிவு செய்தனர். மாற்றப்பட்ட இருதயத்தை உடல் ஏற்க மறுப்பதை சரிசெய்யும் மருந்துகளை அவர் உட்கொண்டு வந்தது, தொழில் நுட்ப ரீதியில் இந்த அறுவை சிகிச்சையை மேலும் சிக்கல் நிறைந்ததாக மாற்றியது. மேலும், இது பெரிய அறுவை சிகிச்சை என்பதால் தொற்று ஏற்படவும் வாய்ப்பு அதிகமாக இருந்தது.

எனவே, டாக்டர்கள் இந்த அறுவை சிகிச்சையை நேர்த்தியாக மேற்கொள்ள முடிவு செய்தனர். அதன்படி, நோயாளி காலின் தொடை மேல் பகுதியில் 2 குழாய்களை நுழைத்து, இருதய நுரையீரல் எந்திரத்துடன் இணைக்கப்பட்டது. அறுவை சிகிச்சைக்காக அவரது மார்பு பகுதியை திறப்பதற்கு முன்பாக உடல் குளிரூட்டப்பட்டது.

### சிக்கலான அறுவை சிகிச்சை

ரத்த நாள நெளிவு மார்பறையில் புடைத்துக் கொண்டிருந்ததால், இவ்வாறான சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. பின்னர், நோயுற்ற வால்வு, ஏறுமுக பெருந்தமனி மற்றும் கூறுபட்ட இருதயச் சுவர் சிரை தமனிகள் அகற்றப்பட்டன. ஏறுமுக பெருந்தமனி மற்றும் பெருந்தமனி வால்வு, செயற்கை வால்வு மற்றும் கிராப்ட் கொண்டு மாற்றப்பட்டன. மேலும், இருதயச் சுவர் சிரை தமனிகள் மீண்டும் பொருத்தப்பட்டது.

இந்த சிக்கலான அறுவை சிகிச்சையை டாக்டர்கள் வி.வி.பாஷி, அஜூ ஜேக்கப் தலைமையிலான விஜித், பிரசன்னா, ஜியோத்ஸ்னா, அஜித் குழுவினர் மேற்கொண்டனர். தற்போது, அந்த பெண் சிக்கல் ஏதுவுமின்றி குணமடைந்தார். விரைவில் வீடு திரும்பவும் உள்ளார்.

### இந்தியாவில் முதல் முறை

இந்தியாவில் இதற்கு முன்பாக இருதய மாற்று அறுவை சிகிச்சை செய்து கொண்ட நோயாளிக்கு, இதுபோன்ற சிக்கலான அறுவை சிகிச்சை நடந்ததில்லை. உலக அளவில் இதுபோன்ற அறுவை சிகிச்சை மேற்கொள்வது 3-வது முறையாகும்.

நோயாளி ஏழ்மையான குடும்பத்தை சேர்ந்தவர் என்பதால், மியாட் இன்டர்நேஷனல் நிர்வாகம் இந்த அறுவை சிகிச்சைக்கும், மருத்துவ சிகிச்சைக்கும் சேர்த்து சுமார் ரூ.5 லட்சம் கட்டணத்தை முற்றிலுமாக தள்ளுபடி செய்துள்ளது.

அறுவை சிகிச்சை செய்து குணமடைந்த பெண்ணை, மியாட் மருத்துவமனை நிர்வாக இயக்குனர் டாக்டர் மோகன்தாஸ், சேர்மன் மல்லிகா மோகன்தாஸ் ஆகியோர் வாழ்த்தினர்.